Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

WEDNESDAY, DECEMBER 6, 2023

புதன்கிழமை டிசெம்பர் 06, 2023 | ஒளி: 09 கதிர் 143 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | Free

# யாழில் DJ nightக்கு அனுமதி மறுப்பு

■ எம்.றொசாந்த்

வருட இறுதியை முன்னிட்டு (Year End) இரவு இசை நிகழ்வுக்கு (DJ night) யாழ்.மாநகர சபையிடம் அனுமதி கோரப்பட்ட நிலையில், மாநகர சபை அனுமதி மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# „சிங்களத்தால் மட்டுமே முன்னேற முடியாது"



■ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக அரசாங்கம் மீண்டுமொரு முறை சிந்திக்க வேண்டும். மனப்பாட கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

50களில் இருந்து சிங்களம் மட்டும் என்று கூறும் பொறிமுறைக்குள் இருந்து கொண்டு ஒரு நாடாக முன்னேற முடியாது. எனவே சிங்கள மொழி உள்ளடங்களாக பிற மொழிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது போல் ஆங்கில மொழிக் கல்விக்கும் முன்னுரிமை வழங்கவேண்டிய நேரம் வந்துள்ளதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஓராண்டு குறைப்பு

கல்வி அமைச்சின், புதிய கல்விச் சீர்திருத்தங்களின் பிரகாரம் அரச பாடசாலைகளின் கல்வித் தரங்களின் எண்ணிக்கையை 12 ஆகக் குறைக்கவும், சாதாரண தரப் பரீட்சையை 10 ஆம் தரமாகவும், உயர்தரப் பரீட்சையை 12ஆம் தரமாகவும் கொண்டு வர முன்மொழியப் பட்டுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின்படி, ஒரு குழந்தையின் பள்ளிக் கல்வி 17 வயதில் முடிவடைகிறது, மேலும் புலமைப்பரிசில் பரீட்சையை எளிமையாக்கவும் போட்டியைக் குறைக்கவும் முன்மொழியப்பட்டு தரம் ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சையை பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடுகள் மற்றும் குறிப்பிட்ட சதவீதத்திற்கு கொண்டு வர முன்மொழியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "எப்படி முடியும்?"

பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளதாக தெரிவித்த சுயாதீன எதிரணி எம்.பி.யான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அப்படியானால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் எவ்வாறு பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.



தொடர்ச்சி P2

# முகவரி விவகாரத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



மலையக மக்கள் அனைவருக்கும் முகவரியை பெற்றுக்கொடுக்கும் செயற்பாட்டை தொடருமாறு உயர்நீதிமன்றம் திங்கட்கிழமை (04) உத்தரவிட்டுள்ளது.

முவன்கந்த தோட்டத்தைச் சேர்ந்த சுரேஷ் ஜீவரத்னம் என்ற இளைஞன், தாக்கல் செய்த வழக்கு விசாரணைகளை முடிவிலேயே உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# 'தேசிய டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ்'

உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் இ-மக்கள் தொகை பதிவு வேலைத்திட்டத்தின் கீழ் 'தேசிய டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ்' அல்லது 'தேசிய பிறப்புச் சான்றிதழ்' வழங்கும் நிகழ்வு களுத்துறை மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (5) ஆரம்பமானது.

# மொட்டை தோற்கடித்த மொட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டு சின்னம்) தலைவர் முன்வைத்த பட்ஜெட் யோசனையை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் இணைந்து தோற்கடித்த சம்பவம், செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்றுள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபையின் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) தலைவரினால் முன்வைக்கப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட யோசனைகளை,

தொடர்ச்சி P2

## யாழ்.பல்கலைக்கழக

# சட்டக் கல்லூரியில் தமிழில் தொடர வசதி வேண்டும்

யாழ்.பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்லூரியை தொடர்வதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான எஸ்.ஸ்ரீதரன் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண



தொடர்ச்சி P2

# புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்க

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பிள்ளைகளுக்கு பெரும் சுமையாகவே உள்ளது. எனது ஆட்சியில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்வதற்கு நான் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. ஆகையால், அந்த முறைமையை இரத்து செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதியும் எம்.பியுமான மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# ஐயப்ப பக்தர்களுக்கு விசாக்கள் அதிகரிப்பு

சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரித்து கொடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அகில இலங்கை மலையக ஐயப்ப ஒன்றியத்தின் நிர்வாக குழுவினருக்கும், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் அமைச்சில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2



# ஞாயிறன்று சபை கூடும்


ஞாயிற்றுக்கிழமை 10ஆம் திகதி நடைபெறவுள்ள, பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்துக்கு பாராளுமன்றம், செவ்வாய்க்கிழமை (05) அங்கீகாரம் வழங்கியது.

நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் பாராளுமன்றத்தை கூட்ட முடியாது. அப்படியானால்,

தொடர்ச்சி P2

# "ஆண் மாணவர்கள் இடைவிலகல் அதிகரிப்பு"

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியில் இருந்து மாணவர்கள் குறிப்பாக ஆண் மாணவர்கள் இடைவிலகும் வீதம் அதிகரித்துள்ளதுடன் பெருமளவிலான பாடசாலை மாணவர்கள் பல்வேறு காரணிகளினால் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள்ளதாக ஜே.வி.பி. எம்.பி.யான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வரவு- செலவுத்

தொடர்ச்சி P2

# 50 ஆயிரம் மாணவர்கள் குறைவு

நாட்டில் பிறப்பு சதவீதம் குறைந்தமையால், பாடசாலைகளுக்கு உள்ளீர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கை 50, ஆயிரமாக குறைந்துள்ளது என கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமசந்திர தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு ஐந்து வயது நிறைவடைந்தவுடன் மாணவர்களாக உள்ளீர்க்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலைகளுக்கு தற்போது உள்ளீர்க்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரம் பேராகும். எனினும், இன்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்னர், பாடசாலைகளுக்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் பிள்ளைகள் உள்ளீர்க்கப்பட்டனர் என்றார்.

பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> **பத்து வருடங்களுக்கு முன்னர், பாடசாலைகளுக்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் பிள்ளைகள் உள்ளீர்க்கப்பட்டனர். தற்போது உள்ளீர்க்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரம் பேராகும்**



PAGE 1 தொடர்ச்சிகள்

# “சிங்களத்தால் மட்டுமே முன்னேற முடியாது”

எமது நாட்டின் கல்விப் பரப்பில் புதிய மாற்றங்களை உள்வாங்கி கல்வியின் புதிய யுகத்திற்குள் நுழைய வேண்டும். 50 களில் இருந்து சிங்களம் மட்டும் என்று கூறும் பொறிமுறைக்குள் இருந்து கொண்டு ஒரு நாடாக முன்னேற முடியாது. நாமாகவே சுவர்களைக் கட்டிக்கொண்டு, எல்லைகளை வகுத்து, குறுகிய மனப்பாங்குடன் செயல்படும் போக்கில் ஒரு நாடாக உண்மையான சுபீட்சத்தை எட்ட முடியாது என்பதால்,சிங்கள மொழி உள்ளடங்களாக பிற மொழிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவது போலவே ஆங்கில மொழி கல்விக்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய நேரம் வந்துள்ளது என்றார்.

எனவே, நாட்டில் இருக்கும் 10,126 பாடசாலைகளிலும் ஆங்கில கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதேபோன்று தற்போது பாடசாலைகளில் 6ஆம் தரத்தில் இருந்து 13ஆம் தரம் வரை கற்பிக்கப்படும் தொழில்நுட்ப கல்வியை 1ஆம் தரத்தில் இருந்து 13ஆம் தரம் வரைக்கும் விருத்தி செய்ய வேண்டும். அத்துடன், தொழில்நுட்ப கல்வியைத் தாய் மொழியில் அல்லாமல் ஆங்கில மொழியிலேயே கற்பிக்க வேண்டும். அதன் மூலமே அதன் உண்மையான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேநேரம் நாட்டில் இருக்கும் அனைத்து பாடசாலைகளையும் ஸ்மாட் வசதி உள்ள பாடசாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னரும் பின்னரும் கல்வியில் இருந்து வெளியேறும் மாணவர்கள் தொழிற்பயிற்சி கல்வியை நாடினாலும், தற்போது, அதன் தரம் குறைந்துள்ளது. உயர்கல்வி வாய்ப்புகளை வலுப்படுத்த வேண்டும். உயர் கல்விக்கான வாய்ப்புகளை இழந்தோர்களுக்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்த வேண்டும் நாட்டில் 70 வீதமானவர்களுக்குப் பல்கலைக்கழக வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்களுக்கும் உயர்கல்விக்கான உரிமை வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக அரசாங்கம் மீண்டுமொரு முறை சிந்திக்க வேண்டும். மனப்பாட கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தரம் 5, கல்வி பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர் தர பரீட்சைகளின் சில பாடங்கள் மனப்பாடம் செய்து விடை எழுத வேண்டி இருக்கிறது என்றார்.

# யாழில் DJ nightக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள பிரபல விடுதியில் ஒன்றிலேயே இரவு இசை நிகழ்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றில் கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற இசை நிகழ்வில் (DJ night) கலந்து கொண்ட இளையோர் மது அருந்தியதாகவும் , அதில் சிலர் போதைப்பொருளைப் பாவித்ததாகவும் செய்திகள் வெளியாகி கடும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

அது குறித்து , பொலிஸாரோ , நிகழ்வுக்கு அனுமதி வழங்கிய மாநகர சபையோ கவனம் செலுத்தவில்லை என பொலிஸ் மற்றும் மாநகர சபையினர் மீதும் கடுமையான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன.

இந்நிலையில், வருட இறுதி இரவு இசை நிகழ்வுக்கு அனுமதி கோரிய போதும் , மாநகர சபை அதற்கு அனுமதி கொடுக்க மறுத்துள்ளது.

# ஓராண்டு குறைப்பு

பொதுத் தேர்வுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பாடங்களின் எண்ணிக்கை 9-லிருந்து 7 ஆகக் குறைக்கப்பட்டு, அந்த 7 பாடங்களில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம், தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறை திறன்கள் மற்றும் மதம் மற்றும் மதிப்புகள் ஆகிய மூன்று புதிய பாடங்கள் கட்டாயமாக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முகவரி விவகாரத்துக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர்நீதிமன்ற நீதியரசர்களான எச்.எம்.டி.நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு திங்கட்கிழமை (04) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா, முவன்கந்த தோட்டத்தைச் சேர்ந்த அனைவருக்கும் முதற்கட்டமாக முகவரியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

# ஐயப்ப பக்தர்களுக்கு விசாக்கள் அதிகரிப்பு

இதன்போது ஐயப்ப பக்தர்களுக்கு நாளொன்றுக்கு 100 விசாக்கள் மட்டுமே வழங்கப்படுகின்றது அதன் செல்லுபடிகாலம் ஒரு மாதமாக உள்ளது.

எனவே, விசாக்களையும், கால எல்லையையும் அதிகரித்து தருமாறு ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, இலங்கைக்கான இந்திய தூதவர் கோபால் பாக்லேவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் பேச்சு நடத்தினார்.

இதன்பலனாக நாளொன்றுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், செல்லுபடியாகும் கால எல்லையை 2 மாதங்களாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மொட்டை தோற்கடித்த மொட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஏழு உறுப்பினர் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 19 பேர் இணைந்து, ஒன்பது மேலதிக வாக்குகளால் தோற்கடித்துள்ளனர்.

இலங்கையில், இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களில் எல்பிட்டிய பிரதேச சபை மட்டுமே தற்போது செயற்பாட்டில் உள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபையின் மாதாந்த கூட்டம், பிரதேச சபையின் தலைவர் கருணாசேன பொன்னம்பெருமவின் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) தலைமையில், செவ்வாய்க்கிழமை (05) முற்பகல் 10 மணிக்கு, பிரதேச சபையின் மண்டபத்தில் ஆரம்பமானது.

சமய வணக்கம் மற்றும் உயிரிழந்த படையினரை நினைவுகூர்ந்ததன் பின்னர், 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட யோசனைகள், சபை தலைவரினால் முன் வைக்கப்பட்டது. அதன் பின்னர் வாக்கெடுப்புக்கு விடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**“ சமய வணக்கம் மற்றும் உயிரிழந்த படையினரை நினைவுகூர்ந்ததன் பின்னர், 2024ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட யோசனைகள், சபை தலைவரினால் முன்வைக்கப்பட்டது**

# “எப்படி முடியும்?”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் முதலாவது பிரச்சினை , பல்கலைக்கழகங்களை உருவாக்கி அவற்றுக்கான ஆளணி மற்றும் பௌதீக வளங்களை வழங்கும் இயலுமை மாகாண சபைகளுக்கு உள்ளதா என்பது. அடுத்தது பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கும் வழங்கப்படும் என்றால் அந்த மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

தற்போது நாட்டில் உள்ள மாகாண சபைகள் அனைத்தும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அங்கு மக்கள் பிரதி நிதிகள் எவரும் இல்லை. இவ்வாறான நிலையில் மாகாண சபைகளினால் எப்படி பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியும்? அவ்வாறு மாகாண சபைகளைக்கொண்டு பல்கலைக்கழகங்களை அரசு உருவாக்க விரும்பினால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்றார்.



# புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்க

முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் எட்டாம் தரத்துக்குப் பின்னரே பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் இங்கு தான் முதலாம் தரப்பில் இருந்து பரீட்சைகள் நடத்தப்படுகிறது என்றார்.

அண்மையில் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 99 சதவீதமானவர்கள் பரீட்சை முடிந்த பின்னர் வினாத்தாள் கடினம் என்று கூறிக்கொண்டு வீட்டுக்கு அழுது கொண்டே சென்றார்கள். சகல மாவட்டங்களிலும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியான பிறகு ஒருசில பெற்றோர் முறையற்ற வகையில் நடந்து கொள்கிறார்கள். தனது பிள்ளை குறைவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டால் அந்த பிள்ளையை நெருக்கடிக்கு ள்ளாக்குகிறார்கள். தாக்குகிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளினால் அந்த பிள்ளை உளவியல் ரீதியில் பாதிக்கப் படுகின்றது. .கடந்த காலங்களில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியாகிய பின்னர் குறைந்த புள்ளி பெற்ற பிள்ளைகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் நாட்டில் பதிவாகியுள்ளன என்றார்.

# “ஆண் மாணவர்கள் இடைவிலகல் அதிகரிப்பு”

திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் கல்வித்துறை பெரும் பாதிப்பை எதிர்கொண்டது. கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள கல்வித்துறைமை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பாடத்திட்டங்களை நிறைவு செய்வது முழுமையடையவில்லை. அதன்பின்னர் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கல்வித்துறை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியிலிருந்து மாணவர்கள் குறிப்பாக ஆண் மாணவர்கள் இடைவிலகும் வீதம் அதிகரித்துள்ளது. பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் இலாபமடையும் நோக்கத்துடன் செயற்படுகின்றன.

நிர்வாகக் கட்டமைப்பின் மோசடியால் மாணவர்கள் தான் இறுதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.



# ஞாயிறன்று சபை கூடும்

நிலையான உத்தரவுகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

இந்த விவாதத்திற்காக, சபையின் கூட்டத்திற்கான நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துவதற்குப் பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்துவதற்கான பிரேரணை சபைத் தலைவர் அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவினால் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், ஞாயிற்றுக்கிழமை (10) காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பாராளுமன்றம் கூடும். இதற்கு முன்னதாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 10ஆம் திகதி வற் திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தை நடத்துவதற்குப் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

# சட்டக் கல்லூரியை தமிழில் தொடர வசதி வேண்டும்

ஆசிரியர்களின் நலன்களுக்காகத் தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை நிறுவனத்தை முல்லைத்தீவு மாங்குளத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ்,ஆங்கிலம் மற்றும் சிங்களம் மொழியில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்ட கல்வியை தொடர வாய்ப்பில்லை. தமது தாய்மொழியில் சட்ட கல்வியை கற்க எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1988ஆம் ஆண்டு நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்துக்கு தெரிவானேன். அப்போதைய சூழ்நிலையால் என்னால் சட்ட கல்வியை தொடர முடியவில்லை. சட்டக்கல்வி வாய்ப்பு யாழ்.பல்கலைக்கழத்தில் இருந்திருந்தால் நானும் ஒரு சட்டத்தரணியாகியிருப்பேன். ஆகவே, தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழியில் சட்டத்தை கற்கும் வாய்ப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மிக முக்கிய பல்கலைக்கழகமாக உள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியற் துறையை “பீடமாக” உருவாக்குமாறு கடந்த ஆண்டும் வலியுறுத்தினேன்.ஆனால் இதுவரை அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளையை முல்லைத்தீவு மாங்குளத்தில் நிறுவுமாறு பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.தற்போதைய பொருளாதார சுமைகளுக்கு மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்கள் தமது துறைசார் நடவடிக்கைகளுக்காக தலைநகருக்கு வருவதால் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே இந்த கோரிக்கை தொடர்பில் கரிசனை கொள்ளுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

யாழ்.தீவக பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கடினமான முறையில் தான் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்றார்.

# குவேனியின் குடத்தை தேடியோருக்கு சிக்கல்

**ரஸீன் ரஸ்மின்**

கற்பிட்டி - நுரைச்சோலை, ஆலங்குடா பகுதியில் நீதவான் ஒருவருக்கு சொந்தமான தோட்டத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஞாயிற்றுக்கிழமை (03) உத்தரவிட்டுள்ளார்.

குறித்த தோட்டத்தின் காவலாளி உட்பட புதையல் தோண்டுவதற்கு உதவிய கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பால்க்கு சொந்தமான 25 ஏக்கர் தோட்டத்தில் புதையல் தோண்டப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸில் அளித்துள்ள முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவலைப்பின்போதே சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.



புதையல் தோண்டப்பட்ட தோட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கும் மேல் காவலாளியாக கடமை புரிந்து வரும் சந்தேக நபர், அந்த தோட்டத்தில் குவேனி பாவித்ததாகக் கூறப்படும் செம்பு வகையைச் சேர்ந்த குடம் ஒன்று புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை தேடியே தோட்டத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆதிவாசிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு

**ஹஸ்பர்**

மட்டக்களப்பு - வாகரை ஆதிவாசிகள் கிராமத்திற்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஆதிவாசிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துள்ளார்.



வாகரையில் உள்ள ஆதிவாசிகள் தங்களுடைய கிராமத்தில் பல வருட காலமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளதுடன், தங்களுடைய கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. ஆதலால் மாணவர்கள் பெரும் சிரமத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

அத்துடன், கிராமத்திற்கான வீதிகள் கடும் மோசமான நிலையில் உள்ளது. வைத்தியசாலைக்கு உதவியாளர்களை நியமித்துத் தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆதிவாசிகளின் கோரிக்கையின் பிரகாரம் 24 மணித்தியாலத்தில் மாகாண கல்வி அமைச்சின் ஊடாக 02 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையும், வைத்தியசாலைக்கு உதவியாளர் நியமிப்பதற்கும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆளுநரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# போதையில் மோதல்; ஒருவர் மரணம்



ஜா-எல, உதம்விட்ட பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் 34 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஜா எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜா-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்பலிய குருசாவல வீதியைச் சேர்ந்த தனுக சம்பத் சில்வா (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய இரு குழுவினரும் விடுதி ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட தகராறில் குறித்த நபர் கடுமையான தாக்குதலுக்குள்ளாகி ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# கொழும்பு நகரை அழுகுபடுத்த திட்டம்

கொழும்பு நகரை அழகுபடுத்தும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பேர வாவி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் திங்கட்கிழமை (04) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை அறிவுறுத்தியுள்ளார்.



அத்துடன், பேர வாவியை அபிவிருத்தி செய்தல், கொழும்பு மத்திய பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பேருந்து நிலையம் அமைந்துள்ள காணியை தனியார் துறையினருடன் இணைந்து வர்த்தக செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்தல், கொழும்பு நகரிலுள்ள பாதுகாப்பற்ற மரங்களை அகற்றி, பொருத்தமான மரங்களை நடல், கொழும்பு நகரில் உள்ள கைவிடப்பட்டு, காடாக மாறியுள்ள கட்டிடங்களை அடையாளம் கண்டு பராமரித்தல், கொழும்பு நகர போக்குவரத்து, பயணிகளை ஏற்றிச் செல்வது மற்றும் இறக்குவது தொடர்பான ஒழுங்குமுறைத் திட்டத்தைத் தயாரித்தல், மழைநீர் முறையாக வடிந்து செல்வதற்கு முன்னெடுத்து வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் கொழும்பில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் இலங்கை பொலிஸ், கொழும்பு மாநகர சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் இணைந்து வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

# பயணியின் கத்திக்குத்தில் ஓட்டோ சாரதி படுகாயம்

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**

புதிய காத்தான்குடி 2 பதுரியா பகுதியில் வசிக்கும் முச்சக்கரவண்டி சாரதியான முஹம்மட் ஜெமீல், காத்தான்குடி, மண்முனை ஒல்லிக்குளம் பகுதியில் வைத்து திங்கட்கிழமை (4) கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

காத்தான்குடி பிரதான வீதி டெலிகொம் சந்தியில் வைத்து, மண்முனைக்கு போக வேண்டுமென கூறிய நபரை இவரது முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்றுள்ளார்.

முச்சக்கரவண்டியில் பின்னாலிருந்து பயணித்த நபர், மண்முனை ஒல்லிக்குளம் பகுதியில் வைத்து முச்சக்கரவண்டி சாரதி மீது கத்தியால் குத்தி



விட்டு, சாரதியிடமிருந்த பணத்தையும் எடுத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டார்.

இச் சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டி சாரதி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## தொழிலாளர்கள் தேவை

தையல் கலைஞர் (ஆண்-பெண்), உதவியாளர் (பெண்), ஷோ ரூம் பராமரிப்பாளர் (பெண்) தேவை.
இலக்கம் 1 & 3 (1D), சின்சபா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6
தொடர்புகளுக்கு: 0777340758 அறை: 0765637235


# மூலோபயத்தின் மூலம் ஐஸ் பிடித்த பொலிஸார்

மொனராகலை பொலிஸ் பிரிவில், மதுரகெட்டிய பிரதேசத்தில், போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுப்பட்டிருந்த நபரொருவரை, மூலோபயத்தை பயன்படுத்தி கைது செய்த பொலிஸார், அவரிடமிருந்து 483 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை திங்கட்கிழமை (04) கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, அக்கிராமத்துக்குச் சென்ற பொலிஸார், ஐஸ் போதைப்பொருளை கொள்வனவு செய்யும் நோக்கில் ஒருவரை மாறுவேடமிட்டு அனுப்பியுள்ளனர்.

அப்போது, அவ்வீட்டில்



இருந்தவர்கள் ஐஸ் போதைப்பொருளை விற்பனைச் செய்ய முயன்றுள்ளார். மாறுவேடமிட்டவரின் பின்னால் சென்ற ஏனைய பொலிஸார், அவரை கைது செய்தததுடன், ஐஸ் போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மொனராகலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# சகோதரியை கத்தியால் தாக்கிய கான்ஸ்டபிள் கைது

**ரஸீன் ரஸ்மின்**

காணி தகராறில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் தனது சகோதரியை வீச்சுக் கத்தி ஒன்றில் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் புத்தளம் - பல்லம பகுதியைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி - நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பல்லம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்லம - திம்பிரிகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தனது சகோதரியுடன் ஏற்பட்ட காணித் தகராறு காரணமாக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் தனது சகோதரியை வீச்சுக் கத்தி ஒன்றினால் தாக்கி காயப்படுத்தியுள்ளார் என பல்லம பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் சகோதரி, சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிளை ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பல்லம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





மகளிர் தொழில்முனைவோர் 2023 இல் பங்கேற்க இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!

ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக

மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2023

விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய. மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர், இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2023 ஆம் ஆண்டின் மிக விரும்பப்படும் பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை தொடர்புடைய இணைப்புகளுடனும் WCIC க்கு நுழைவுக் கட்டணச் சான்றுடனும் 2023 டிசெம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்

பிளட்டினம் | டயமன்ட் | கோல்ட் | ப்ரோன்ஸ்

DFCC Aloka (வங்கிப் பங்காளர்)

ஊடக பங்காளர் - அச்சு / சமூக ஊடகம்

இணையும் இலத்திரனியல் பங்காளர்கள் | அறிவுசார் பங்காளர் | தொடர்பாடல் பங்காளர்

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை

இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில், கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080


# ஆறுமுகநாவலரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

**க. அகரன்**

ஆறுமுகநாவலரின் 144ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு வவுனியா -இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவு சிலையடியில் நகரசபை செயலாளர் பூ.செந்தில்நாதன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஆறுமுகநாவலரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.





அவர் தொடர்பான நினைவுரைகளை கா.அனிஸ் என்ற மாணவனும், தமிழருவி சிவகுமாரன், தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் நிகழ்த்தியுள்ளனர்.

வவுனியா உள்ளூர் விளைபொருள் உற்பத்தியார்கள் சங்கம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள், நகரசபை ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

> **ஆறுமுகநாவலரின் 144ஆவது நினைவு தினத்தன்று அவரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது**

# சமூகமட்டத்தில் குறைந்திருக்கும் பாலியல் தொடர்பான அறிவு

எமது நாட்டில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தற்போதைய நவீனத் தொழில்நுட்ப யுகத்தில், பாலியல் தொடர்பான சந்தேகங்களுக்கான தேடல்களை இருபாலரும் பன்னிரண்டு வயதின் ஆரம்பத்திலேயே ஆரம்பிக்கின்றனர்.

பிறப்புறுப்புகள், எதிர் பாலின கவர்ச்சி, மாதவிடாய், உடலுறவு என நீளும் அந்த தேடல் பட்டியலுக்கான விடைகள், துரதிர்ஷ்டவசமாகப் பாடசாலைகளில் கிடைப்பதில்லை. இவ்விஷயங்களில் பெற்றோர்களின் பங்கும் குறைவு. ஏனெனில், பாலியல் கல்வி எமது நாட்டில் இல்லை சிறுவர், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றமைக்கு இதுவும் ஒரு காரணமாகிறது.

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண்ணின் பாலியல் குறித்த அடிப்படை சந்தேகங்களைக் கூட ஏதோ பெரிய குற்றம் போல பார்க்கும் பெற்றோர்களின் மனநிலையும் மாற வேண்டும். பாலியல் கல்வி, உடல் உறுப்புகள் பற்றிய அறிவு ஆகியவை தவறாமல் இந்த வயதில் அவர்களுக்குச் சொல்லப்படவேண்டும்.

இன்றைய நிலையில் பாலியல் தொடர்பான அறிவு அல்லது தெளிவு சமூக மட்டத்தில் மிகவும் குறைவான மட்டத்தில் உள்ளது. பல்வேறு காரணிகளைக் குறிப்பிட்டுக் கொண்டு பாலியல் கல்வி முறைமையை அமுல்படுத்தாமல் இருந்தால் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. எனவே, தற்போதைய நிலையில், பாலியல் கல்வி கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது, ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவருடைய பதவிக்காலத்தின் முதல் வருடத்தில், இப்பிரச்சினையை எதிர்ப்பதற்கான சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்குச் சிறியளவான ஏற்பாடுகளே இடம்பெற்றுள்ளன. தொடர்ச்சியாகப் பதவிக்கு வருகின்ற அரசாங்கங்களைப் பார்க்கின்றபோது, இப்போக்கு இலங்கையில் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும் என்பதையே எடுத்துக்காட்டுக்கின்றது.

பாலியல் கல்வியை அறிமுகப்படுத்தும் போது, மதத்தலைவர்கள் பலரும் அதற்குக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்தனர். எனினும், நவீன யுகத்துக்கு ஏற்றவகையில், பாடசாலை மட்டத்தில் இருந்தே கொஞ்சம், கொஞ்சமாக அக்கல்வியைப் புகுத்த வேண்டும். இல்லையேல், சிக்கிக்கொள்வோரின் எண்ணிக்கை, மரணமடைவோரின் தொகை அதிகரிக்கும்.

பாலியல் உணர்வை ஊக்கப்படுத்தும் மருந்துகளின் பயன்பாட்டினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மருத்துவர்களின் ஆலோசனையின்றி மருந்துகளைப் பயன்படுத்துவது, தரமற்ற மருந்துகளின் பயன்பாடு மற்றும் தவறான அளவுகளில் பயன்படுத்துகின்றமை இந்த உயிரிழப்புக்களுக்கு முக்கிய காரணங்களாக உள்ளன. இவற்றுக்கு

பாலியல் தொடர்பான அறிவு சமூகத்தில் குறைவாகக் காணப்படுகின்றமை பாரியதொரு பிரச்சினையாக உள்ளது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# மஹிந்தவின் தடுமாற்றம்



எம்.எஸ்.எம். ஐயூப்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு கோட்டாபய, மஹிந்த பசில் மற்றும் மத்திய வங்கியிலும் திறைசேரியியலும் உயர் அதிகாரிகள் சிலர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கடந்த (நவம்பர்) மாதம் 14ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

ஆரம்பத்தில் தாம் நீதிமன்ற தீர்ப்பை மதிப்பதாகக் கூறிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பின்னர் தாம் அத்தீர்ப்பை ஏற்பதில்லை என்றார். இதனையடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அரசாங்கங்கள் பொருளாதார விடயங்களைப் பற்றி சகல முடிவுகளையும் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடனேயே எடுத்ததாகவும் எனவே தாம் அல்ல, பாராளுமன்றமே பொருளாதார நெருக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் கடந்த மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூறினார்.

பின்னர் கடந்த வாரம் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், தாம் அல்ல, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நாட்டை ஆட்சி புரிந்த நல்லாட்சி அரசாங்கமே பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டு உள்ளார்.

இது உயர்நீதிமன்ற தீர்ப்பை மறுத்துத் தெரிவித்த கருத்து என்பதால் அது அத்தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தும் செயலாகவே தெரிகிறது. ஆனால், அது நீதிமன்றத்தை அவமதிப்பதாக அமையுமா என்பதை நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும். ஒரு வகையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் தகாத வார்த்தைகளைப் பாவிக்காத நிலையில், நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்க முடியும் என்றதோர் கருத்தும் இருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம் மேற்கொண்ட பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான சில நடவடிக்கைகளை மேற்படி உயர் நீதிமன்ற வழக்கின் போது மனுதாரர்கள் எடுத்தரைத்தனர். கோட்டாபய 2019இல் பதவிக்கு வந்த உடன் பல்வேறு வரிச் சலுகைகளை அறிவித்தார். அதன் மூலம் திறைசேரி வருடத்துக்கு 68,000 கோடி ரூபாவை இழந்தது. இது நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்தது என்பது ஒரு குற்றச்சாட்டாகும்.

அதேவேளை, 2021இல் டொலரின் பெறுமதியை 203 ரூபாவாக செயற்கையாக வைத்துக்கொள்ள மத்திய வங்கி தம்மிடமிருந்த டொலரில் பெரும் பகுதியைச் சந்தையில் அள்ளிக் கொட்டியது. அதன் மூலம் சில மாதங்களில் நாட்டில் பெரும் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டு அது சகல துறைகளையும் பாதித்தது என்பது மற்றொரு குற்றச்சாட்டாகும்.

நாட்டில் வெளிநாட்டு செலாவணி நெருக்கடி ஏற்படும் அபாயம் இருந்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதே அதனை சமாளிக்க இருக்கும் ஒரு வழியாகும். ஆனால், பல நிபுணர்கள் இதனை சுட்டிக் காட்டியும் கோட்டாவின் அரசாங்கம் உரிய நேரத்தில் நாணய நிதியத்திடம் செல்லவில்லை என்றும் மனுதாரர்கள் குற்றஞ்சாட்டி இருந்தனர். அவற்றை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

பொருளாதார விடயங்கள் தொடர்பான முடிவுகள் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடனேயே மேற்கொள்ளப்பட்டதாக மஹிந்த முன்னர் கூறினார். அவ்வாறாயின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானதாக பொருளியல் நிபுணர்களும் உயர் நீதிமன்றமும் கூறும் மேற்படி முடிவுகளைப் பாராளுமன்றம் அங்கீகரித்ததா? வரி குறைப்பைப் பற்றியோ ரூபாவின் பெறுமதியைச் செயற்கையாக ஒரே அளவில் வைத்துக்கொள்வதைப் பற்றியே அல்லது சர்வதேச நாணய நிதியத்திடம் போகாதிருப்பதைப் பற்றியோ கோட்டாவின் அரசாங்கம் எப்போதாவது பாராளுமன்றத்தின் அபிப்பிராயத்தைக் கோரியதா? ஒருபோதும் இல்லை.

அவ்வாறு அபிப்பிராயம் கோரப்பட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பொருளியல் அறிவை பாவித்து மனசாட்சிக்கு ஏற்ப எப்போதாவது முடிவுகளை எடுக்கிறார்களா? இல்லை. தத்தமது கட்சித் தலைவர்களின் நிலைப்பாட்டின் படியே அவர்கள் வாக்களிக்கிறார்கள். 2019இல் கோட்டா பாரியளவில் வர்த்தகர்களுக்கு வரிச் சலுகை வழங்கியபோது, அதன் மூலம் நாட்டின் உற்பத்தி பெருகி நாடு அபிவிருத்தியடையும் என்று பொருளியல் நிபுணரெனக் கூறப்படும் அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

ரூபாவின் பெறுமதியை ஓரிடத்தில் தக்கவைத்துக் கொள்ள மத்திய வங்கியிடம் இருந்த டொலர்களை சந்தைக்கு விட்டதை பற்றி சபையின் கருத்துக் கேட்கப்பட்டு இருந்தாலும் ஆளும் கட்சியினர் அதனையும் நிச்சயமாக அங்கீகரித்தே இருப்பார்கள். நாட்டின் விவசாயத்தை ஏறத்தாழ முற்றாக அழித்துவிட்ட கோட்டாவின் இரசாயன உரத் தடையை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கிராமப்புற எம்.பிக்களும் வரவேற்றுத் தான் கருத்து தெரிவித்து வந்தார்கள். எனவே, பொருளாதார நெருக்கடியின் பொறுப்பைப் பாராளுமன்றத்தின் மீது சுமத்த முடியாது.

இதேபோல் பொருளாதார நெருக்கடிக்கான பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரின் தலைமையிலான "நல்லாட்சி" அரசாங்கத்தின் மீது சுமத்திவிட்டு தாம் தப்பித்துக் கொள்ள மஹிந்த எடுக்கும் முயற்சியும் அபத்தமானதாகும்.

1950களில் இலங்கை பிரிட்டனுக்கும் கடன் வழங்கிய நாடாகும். ஆனால், அதன் பின்னர் மாறி மாறி பதவிக்கு வந்தவர்கள் அடுத்த தேர்தலைக் கருத்திற் கொண்டேயல்லாது அடுத்த தலைமுறையைக் கருத்திற் கொண்டு முடிவுகளை எடுக்கவில்லை. இப்போதும் நாட்டில் வறுமையை ஒழிக்கும் எவ்விதத் திட்டமுமின்றி வறிய மக்களுக்கு "அஸ்வெசும" திட்டத்தின் கீழ் மாதாந்தம் பணம் வழங்குகிறார்கள்.

ஊழலை ஒழித்து நாட்டை அபிவிருத்தியுடைய செய்வதாக வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த "நல்லாட்சி" அரசாங்கம் நாட்டை பொருளாதார ரீதியாக சீரழித்தது என்ற மஹிந்தவின் வாதம் உண்மையாகும். இன்று நாடு எதிர்நோக்கியிருக்கும் பெரும் பிரச்சினை வெளிநாட்டுக் கடன் சுமையாகும். மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் பெருந்தொகை வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டது. அதைக் கொண்டு அவர்கள் என்ன செய்தார்கள்?

ஹம்பாந்தோட்டையில் கப்பல் வராத துறைமுகமொன்றையும் மத்தளையில் விமானம் வராத விமான நிலையம் ஒன்றையும் ஹம்பாந்தோட்டையில் சர்வதேச மாநாடுகளே நடைபெறாத சர்வதேச மாநாட்டு மண்டபம் ஒன்றையும் நிர்மாணித்தார்கள். அவற்றால் பொருளாதாரம் அடைந்த நன்மை என்ன என்பது பெரும் கேள்விக்குறியாகும். அக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரில் முதலீடு செய்யுமாறு கோட்டாவின் காலத்திலிருந்தே அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைக்கிறது. ஆனால், முதலீட்டாளர்கள் வருகிறார்களா?


துறைமுகங்கள், விமான நிலையங்கள், முதலீட்டு வலயங்கள் போன்றவை பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவை உலக அரசியல் கள நிலைவரங்களை மதிப்பிட்டே திட்டமிட வேண்டும். தமது முன்னைய ஆட்சிக் காலத்தில் நாட்டில் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டதாகக் கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிக்கை மூலம் கூறும் மஹிந்த அதற்கான புள்ளி விவரங்களையும் முன்வைத்துள்ளார். அப்புள்ளி விவரங்களின் படி அக்காலத்தில் நாடு பெருமளவில் முன்னேற்றமடைந்து இருக்க வேண்டும். அவ்வாறாயின் அக்காலத்தில் நாம் எங்கே இருந்தோம் என்ற கேள்வி எம்மனதில் எழுகிறது. புள்ளிவிபர ரீதியிலான பொருளாதார வளர்ச்சி என்பது எப்போதும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்தைக் குறிப்பதில்லை. ஏனெனில் பொருளாதார வளர்ச்சி என்பதில் மத்தள விமான நிலையம் போன்ற கட்டுமானங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

அதேவேளை, புள்ளிவிவரங்கள் எப்போதும் நாட்டின் உண்மையான நிலைவரத்தை எடுத்துக் காட்டுவதில்லை என்பதற்கு மற்றொரு உதாரணம் பணவீக்கம் தொடர்பான தகவல்களாகும். தற்போது சந்தையில் விலைவாசி உயர்ந்த வண்ணமே இருக்கிறது. ஆயினும் பணவீக்கம் குறைந்துள்ளதாக மத்திய வங்கியினதும் புள்ளிவிவர திணைக்களத்தினதும் அறிக்கைகள் கூறுகின்றன.

ரணில் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்கம் பொருளாதாரத்தைச் சீரழித்தது என்று மஹிந்த கூறுவது ஒன்றும் புதிய விடயமல்ல. அவ்வாறு கூறி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாக வாக்குறுதி அளித்தே 2019இல் பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தது. அவ்வாறு வாக்குறுதி அளித்தவர்கள் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், அதற்குப் பதிலாக அதற்கு நேர்மாறான நடவடிக்கைகளை எடுத்ததாகவே உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விந்தை என்னவென்றால் "நல்லாட்சி" அரசாங்கம் பொருளாதாரத்தை அழித்துவிட்டது என்று கூறும் மஹிந்தவின் ஆதரவுடனேயே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கடந்த வருடம் ரணிலிடமே நாடு ஒப்படைக்கப்பட்டது. அதே ரணிலின் வரவு-செலவுத் திட்டத்தை அதிகரித்துவிட்டு ரணில் தலைமையிலான கடந்த அரசாங்கமே பொருளாதாரத்தை அழித்தது என்று மஹிந்த கூறுகிறார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தாமே பொறுப்பு என்பதை ராஜபக்ஷக்களே இதற்கு முன்னர் ஏற்றுக் கொண்டுள்ளனர். தாம் உள்ளிட்ட முன்னாள் அரசாங்கங்களும் தலைவர்களும் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்று மஹிந்த கடந்த வருடம் டெய்லி மிரர் பத்திரிகையுடனான நேர்காணல் ஒன்றின் போது கூறினார். இரசாயன உரத்தடையும் உரிய நேரத்தில் நாணய நிதியத்திடம் செல்லமையும் குற்றமாகும் என்று கோட்டாவும் கடந்த வருடம் ஏப்ரல் 18 ஆம் திகதி கூறினார்.



## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார்.

எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், "என்ன எங்கள் ஊரில் சண்டையா" எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, "யாரடா இதைச் சொன்னது" எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது.

கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கடுகதி ரயிலை மீள இயக்க கோரிக்கை




வவுனியா ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி ரயிலினை மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து தினமும் காலை 5. 45க்கு புறப்படும் கடுகதி ரயிலானது கொழும்பை சுமார் 11 மணியளவில் சென்றடைவதனால் கொழும்பில் பணிகளை முடித்துவிட்டு மீண்டும் அங்கிருந்து பிற்பகல் 3. 45 மணிக்கு குறித்த ரயிலில் வவுனியாவை நோக்கி சேவையை தொடர்ந்தபோது பயணிகளுக்கு சௌகரியமாக இருந்துள்ளது எனவும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த ரயில் சேவையினை மீளவும் ஆரம்பிப்பதற்கு ரயிவே திணைக்களம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

க. அகரன்



## இலங்கையில் பாலியல் வன்புணர்வு தொடர்பில்

# பாலினப் பொதுமையான சட்டத்தின் தேவைப்பாடு



மதுரி தமிழ்மாறன்

தேசிய சட்ட ஆலோசகர்– இலங்கை, சர்வதேச சட்டவல்லுநர் ஆணைக்குழு

உலகளவில், பாலின சமத்துவம் மற்றும் நீதிக்கான நாட்டமென்பது பாலியல் வன்முறையை எதிர்த்துப் போராடுவதை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த வாதம் பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பயனுள்ள பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் கண்ணோட்டத்தில் முன்வைக்கப்படுகிறது. இச்சூழலில், ஆண்கள், சிறுவர்கள், திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் பெரும்பாலும் கண்டுகொள்ளப்படுவதில்லை.

இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. ஆண்கள், சிறுவர்கள், திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வு வளர்ந்து வரும் போதிலும், சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கட்டுப்பாடுகளின் கீழ் இலங்கையின் சட்ட அமைப்பானது பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய தகுந்த பாதுகாப்பு மற்றும் நீதியின்றிய அவலநிலையை இன்னமும் தீர்க்க முன்வரவில்லை என்பதே நிதர்சனம்.

இலங்கை அதன் ஆழமான வேரூன்றிய கலாசார நெறிமுறைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதால், நாட்டில் ஆண்கள், சிறுவர்கள், திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்கள் மீதான பாலியல் வன்புணர்வு பெரும்பாலும் மறைக்கப்படுவதில் ஆச்சரியமெதுவுமில்லை. இந்தக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தவர்களில் பெரும்பான்மையானவர்களான பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான பாலியல் வன்முறைகளும் தொடர்பான அறிக்கையிடலே குறைவாக உள்ள வேளையில், ஆண்கள், சிறுவர்கள், திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை நிகழ்வுகளைப் புகாரளிப்பதைத் தடுக்கும் வகையில் ஒரு விரோதமான சூழலை வளர்க்கும், தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான பழைய பாலின நிலைப்பாடுகள் மற்றும் பாகுபாடுகள் சமூகத்தில் செயல்படுகின்றன.

இலங்கையில் உள்ள பாரம்பரிய பாலின நெறிமுறைகள் மற்றும் பின்பற்றிவரும் ஒரே மாதிரியான பழைய பாலின நிலைப்பாடுகள் ஆண்களை வலுவானவர்களாகவும் ஆபத்திற்கு உட்படுத்த முடியாதவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் அவ்வாறானவர்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகக்கூடும் என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று என்ற எண்ணத்தை நிலைநிறுத்துகின்றன.

இதன் விளைவாக, பாலியல் வன்முறையில் இருந்து தப்பிய ஆண்கள், தாங்கள் ஏதாவது பாலியல் வன்முறைக்கு ஆளானதாக ஒப்புக்கொண்டால், பலவீனமானவர்களாகவோ அல்லது ஆண்மையற்றவர்களாகவோ கருதப்படுவார்கள் என்று எண்ணி வெளியில் கூற அஞ்சுகிறார்கள்.


பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள்/ தப்பிப்பிழைத்தவர்கள் பற்றிய குறைவான அறிக்கையிடலானது, குறிப்பாக ஆண்கள் மீதான பாலியல் வன்புணர்வு மிகவும் அரிதானது என்ற தவறான எண்ணத்தை மேலும் நிலைநிறுத்துகிறது, இது சட்டத்தை மாற்றுவதன் அவசரத் தேவையையினையும் தடுக்கிறது.

எவ்வாறாயினும், இத்தகைய குறைவான அறிக்கைகள், இலங்கையின் அரச தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதலின் பின்னர் ஆண்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்புணர்வு, மற்றும் திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு தொடர்பாகப் பதிவான கதை துணுக்கறிக்கைகளுடன் முரண்படுகின்றன. ஆண்களையும் சிறுவர்களையும் பாலியல் வன்புணர்வு புரிபவர்களில் பெரும்பாலானோர் ஏனைய சக ஆண்களே என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு மற்றும் பிற வகையான பாலியல் துஷ்பிரயோகங்கள் பற்றிய குறைவான புகாரளிப்பிற்கு, சமூகத்தில் நிலவும் களங்கம் மற்றும் தன்பாலீர்ப்பு மீதான வெறுப்பு மற்றும் ஒரே பால் பாலியல் நடத்தையைத் தடைசெய்யும் குற்றவியல் சட்டங்களின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் பயன்பாடு போன்றவை ஏதுவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த வடிவமைக்கப்பட்ட அமைதியானது, குற்றவாளிகள் நீதியைத் தவிர்க்கவும் பாலியல் வன்முறையில் இருந்து தப்பியவர்களை இருளில் விட்டு விடும் ஒரு தீய சுழற்சியை உருவாக்குகிறது.

இக்கட்டுரையானது, இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையில் 'பாலியல் வன்புணர்வு' மற்றும் 'பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்' ஆகிய குற்றங்களுக்கு இடையே உள்ள வேறுபடுத்தப்பட்ட நிலையின் காரணமாக பாலியல் வன்புணர்வு குற்றத்தின் மீது கவனம் செலுத்த விரும்புகிறது. பிந்தையது வெளித்தோற்றத்தில் ஏனைய அனைத்து பாலியல் வன்முறைச் செயல்களையும் தடை செய்கிறது.

1883ஆம் ஆண்டின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 363 ஆனது, 1995இல் திருத்தப்பட்டது. இது பாலியல் வன்புணர்வினை ஒரு குற்றமாகக் கருதுகிறது. மற்றும் ஒரு பெண்ணுக்கு எதிராக அவரின் ஒப்புதலின்றி, ஒரு ஆணின் மூலமான புணர்வு என வரையறுக்கிறது. பிரிவு 364இன் கீழ், பாலியல் வன்புணர்வு குற்றவாளிகளுக்கு 7 முதல் 20 ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை, அபராதம் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படும் உளவியல் அல்லது மன அதிர்ச்சி உட்பட காயங்களுக்கு இழப்பீடு வழங்கவும் நீதிமன்றுக்கு உத்தரவு பிறப்பிக்க அனுமதியளித்துள்ளது. பிரிவு 363இல் உள்ள பாலியல் வன்புணர்வுக்கான வரையறையானது, ஒரு பெண் ஒரு ஆணால் பாலியல் வன்புணருவதாக தன்னை மட்டுப்படுத்திக் கொண்டு, ஆண்கள் மற்றும் சிறுவர்கள், திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காதவர்கள் என்று அடையாளம் காண்பவர்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வினை குற்றமாகக் கருதத் தவறிவிட்டது.

1995இல் அறிமுகப்படுத்தப்பட்ட தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 365B ஆனது (பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்), ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு அல்லது பிரிவு 363 இன் கீழ் பாலியல் வன்புணர்வு என்ற வரையறைக்குள் வராத பிற சம்பவங்களுக்குப் பொருந்தும் என்ற பொதுவான புரிதல் காணப்படுகிறது. பிரிவு 365B ஆனது பாலின நடுநிலையானதோடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கியதாகும் என்பதோடு ஒரு நபர் தனது பாலியல் திருப்திக்காக, "அவரது பிறப்புறுப்பு அல்லது மனித உடலின் வேறு எந்தப் பகுதியும் அல்லது எந்தவொரு கருவியையும் மற்றைய நபரின் எந்தவொரு துளை அல்லது உடலின் ஒரு பகுதியிலும் பயன்படுத்துவதன் மூலம், பாலியல் வன்புணர்விற்கு சமமான, பிரிவு 363 இன் கீழ் வராத எந்தவொரு செயலும்" மற்றும் பாதிக்கப்பட்டவர் அச்சுறுத்தல்கள், அல்லது மிரட்டல் காரணமாக ஒப்புதல் அளிக்கப்படாத அல்லது அல்லது பாதிக்கப்பட்டவர் 'மனநிலை சரியில்லாதவர்' அல்லது போதையின் காரணமாக ஒப்புதலிக்காததாக கருதப்படும் எந்தவொரு செயலையும் இந்த பிரிவு உள்ளடக்குகிறது.



**1883ஆம் ஆண்டின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 363 ஆனது, பாலியல் வன்புணர்வினை ஒரு குற்றமாகக் கருதுகிறது**

**ஆண்களையும் சிறுவர்களையும் பாலியல் வன்புணர்வு புரிபவர்களில் பெரும்பாலானோர் ஏனைய சக ஆண்களே என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன**

**பாலியல் வன்புணர்வில் இருந்து தப்பியவர்களுக்கு உதவி எண்கள், ஆலோசனைகள் உள்ளிட்ட ஆதரவு அணுகலைக் கிடைக்கச் செய்ய வேண்டும்.**

**பாலியல் வன்புணர்வு மீதான குற்றவியல் சட்டங்கள் ஆண்கள், சிறுவர்கள், பாலினம் வேறுபட்ட நபர்கள் உட்பட அனைத்து நபர்களையும் எந்தவித பாகுபாடுமின்றி பாதுகாக்க வேண்டும்**

கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு வழங்கப்பட்ட ஆரம்பத் தண்டனையானது பாலியல் வன்புணர்வு தண்டனையைப் போலவே இருந்தபோதிலும், இது 2006ஆம் ஆண்டு திருத்தப்பட்டது, அதன்படி குறைந்தபட்ச சிறைத்தண்டனை காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது (மற்றும் பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்குக் குறைவானவராக இருந்தால் ஏழு ஆண்டுகள்). எவ்வாறாயினும், ஒப்புதலின்றிய எதிர் பாலினத்தவர் அல்லாதோரின் பாலியல் வன்புணர்வு செயல்கள் கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் என வழக்குத் தொடரப்படும்போதெல்லாம், குற்றவாளிகளுக்குக் ஆண்டுகள் குறைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்படும் போதெல்லாம், குறித்த குற்றம் ஏற்படுத்தும் தீங்கானது பிரிவு 363இன் கீழ் பாலியல் வன்புணர்வு குற்றத்தினை விட பாரதூரம் குறைந்த குற்றமாக இதனை கருதச் செய்யும்.

ஒரு பெண்ணுக்கு எதிராக அவரின் ஒப்புதலின்றி ஒரு ஆணால் அவரின் பிறப்புறுப்பினூடான ஊடுருவல் என்று பாலியல் வன்புணர்வு சட்டத்தினை கட்டுப்படுத்துவதானது, ஆண்களை விட பெண்களே மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருப்பதனால் அவர்களுக்கு சட்டத்திலிருந்து அதிக அளவிலான பாதுகாப்பு தேவைப்படுகிறது என்ற சமூகத்தின் ஒரே மாதிரியான பழைய எண்ணங்களின் விளைவாகக்கூட இருக்கலாம். மேலும் ஆண்கள், சிறுவர்கள், திருநர்கள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்கள் பெண்களைப் போன்று பாலியல் வன்முறையை அனுபவிப்பதில்லை என்ற அனுமானத்தின் மீதும் கூட அது தங்கியிருக்கலாம். இது மேலும் கூறுவதாயின், ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளின் குறைவான அறிக்கையிடல் காரணமாக இவை அரிதாகவே நிகழ்கின்றன என்ற பரவலான நம்பிக்கையுடன் தொடர்புடையதாகவும் இருக்கக்கூடும்.

பல அரசுகள் பாலியல் வன்புணர்வு மீதான அவ்வரசுகளின் குற்றவியல் சட்ட பரப்பை விரிவுபடுத்துவதன் மூலம் பெரும்பாலும் அனைவரையும் உள்ளடக்கியதாக மாற்றியமைத்துள்ளன. 2021ஆம் ஆண்டில், பாகிஸ்தான் பாலியல் வன்புணர்வுச் சட்டத்தின் குற்றமாக்கலைத் திருத்தியது. அது ஆணின் பிறப்புறுப்பு ஊடுருவலை மாத்திரம் முழுவதுமாகச் சார்ந்திருக்காது, அதற்குப் பதிலாக, ஒப்புதலின்றிய பாலியல் வன்புணர்வு குற்றத்தில் மற்றொரு நபரின் யோனி, ஆசனவாய் அல்லது சிறுநீர்க்குழாய் மீதான வாய் அல்லது ஏதேனும் பொருள் உட்பட உடலின் எந்தப் பகுதியாலும் செய்யப்படும், அல்லது ஒரு நபர் மற்ற நபரை அவர்களுக்கோ அல்லது மூன்றாவது நபருக்கோ இந்த செயல்களில் ஏதேனும் ஒன்றைச் செய்யும்படி கையாளுகிறார் எனில் அது பாலியல் வன்புணர்வு குற்ற செயலில் அடங்கும் என குறிப்பிடுகிறது. இது மிகவும் பரந்த வரையறையாகும்.

இலங்கையானது, அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களுக்கும் ஒரு பங்காளி தரப்பாகும். பாகுபாடின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் சித்திரவதை மற்றும் பிற கொடுமைகளிலும் இருந்துமான சுதந்திரம், மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் பயனுள்ள தீர்வினை அணுகுவதற்கான உரிமை ஆகியவை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் கீழ் (ICCPR) பாதுகாக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் குழு 2017ஆம் ஆண்டில் ஆண்களை பாலியல் வன்புணர்வு செய்வதைக் குற்றமாக்குதல் மற்றும் ஓரினச்சேர்க்கை குற்றத்தை இரத்து செய்யுமாறு சுவாஸிலாந்தினை கோரியது.

இதற்கு முன் குறித்த குழு பாலியல் வன்புணர்வு பற்றிய அதன் வரையறையை விரிவுபடுத்தி, குற்றத்தின் தீவிரத்தன்மை காரணமாக ஆண்கள் மீதான பாலியல் வன்புணர்வு அடங்கும் வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜப்பானை கோரியது. சித்திரவதைக்கு எதிரான குழுவானது அதன், பொதுக் கருத்து எண்-2இல் சமவாயத்தின் கீழ், பாலியல் வன்புணர்வு அல்லது மற்றும் பிற வகையான பாலியல் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் உள்ளிட்ட சித்திரவதை மற்றும் பிற கொடுமைகள், மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனை போன்ற பாலினத்திற்கெதிரான மீறல்களுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும் உட்பட்டவர்கள் என்று அங்கீகரித்துள்ளது.

மேலும், அத்தகைய மீறல்கள் சமூக ரீதியாக உணரப்பட்ட மக்களின் உண்மையான அல்லது உணரப்பட்ட பாலின இணக்கமின்மை அடிப்படையில் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான மீறல்கள் இடம்பெறுவதைத் தனியார் தடுக்கவோ அல்லது அனுமதிக்கவோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவோ உரிய கவனத்துடன் செயல்படத் தவறினால், அரசுகள் பொறுப்பேற்க வேண்டும் என்று குழு மேலும் குறிப்பிட்டது.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், பாலியல் வன்புணர்வு செயலை குற்றமாக்குவதில் சட்டத்தின் சமமான பாதுகாப்பை வழங்காத ஒரு பாரபட்சமான இலங்கையின் சட்டவாக்கக் கட்டமைப்பானது அதன் சட்ட பொறுப்புடைமைக்கு முரணானது என்பது தெளிவாகிறது. 2021ஆம் ஆண்டில், பாலியல் வன்புணர்வு பெருமளவில் பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பாதிக்கிறது என ஒப்புக்கொண்டாலும், பெண்களுக்கு எதிரான வன்முறை, அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர், வெளியிட்ட மாதிரி பாலியல் வன்புணர்வுச் சட்டம் வன்புணர்வு பற்றிய சமூகத்தின் ஒரே மாதிரியான பழைய சிந்தனைகள் காரணமாகப் பாகுபாடின்றி பாலின பொதுமையான தாக இருக்க முற்பட்டது. "பாலியல் வன்புணர்வு மீதான குற்றவியல் சட்டங்கள் ஆண்கள், சிறுவர்கள் மற்றும் பாலினம் வேறுபட்ட நபர்கள் உட்பட அனைத்து நபர்களையும் எந்தவித பாகுபாடுமின்றி பாதுகாக்க வேண்டும்" என்று அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். மாதிரி பாலியல் வன்புணர்வு சட்டம் பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றவாளி இருவரையும் பொறுத்தமட்டில் பாலின பொதுமையான ஒரு சட்டமாகும்.

இலங்கையில் ஆண்கள், சிறுவர்கள், திருநரகள் மற்றும் இருமைக்குள் அடங்காத நபர்கள் மீதான பாலியல் வன்புணர்விற்கு எதிரான சட்டப் பாதுகாப்பின் போதா நிலைமையினை நிவர்த்தி செய்வதற்குச் சட்டத் திருத்தம் மற்றும் கொள்கை மாற்றங்கள் இன்றியமையாததாகும். பாதிக்கப்பட்டவர் அல்லது குற்றவாளியின் பாலினத்தைப் பொருட்படுத்தாமல், அனைத்து வகையான ஒப்புதலற்ற பாலியல் செயல்பாடுகளையும் உள்ளடக்க பாலியல் வன்புணர்விற்கான தற்போதைய வரைவிலக்கணத்தை திருத்துவது இதில் பிரதானமாக அடங்கும்.

பாலின பொதுமையான வரைவிலக்கணத்தை இணைக்க தற்போதுள்ள சட்டத்தைத் திருத்துவதும், அதைச் செயல்படுத்துவதும் ஒரு குறுக்கு வெட்டு அணுகுமுறையை வழங்குவது தற்போதைய ஏற்றத்தாழ்வைச் சரிசெய்வதில் நீண்ட கால பயனளிக்கும். இதற்கும் மேலதிகமாக, இத்தகைய பாலியல் வன்புணர்வு வழக்குகளை உணர்திறன் மற்றும் திறனுடன் கையாள்வதை உறுதிசெய்ய, சட்ட அமுலாக்க, சட்ட வல்லுநர்கள் மற்றும் சுகாதார வழங்குநர்களுக்கான சிறப்புப் பயிற்சி வழங்குவதானது அவசியமாகும். மேலும், பாலியல் வன்புணர்வில் இருந்து தப்பியவர்களுக்கு அவர்களின் பாலினத்தைப் பொருட்படுத்தாமல் உதவி எண்கள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட ஆதரவு அமைப்புகளுக்கான அணுகலைக் கிடைக்கச் செய்ய வேண்டும். இது, பாலின சமத்துவத்தை அடைவதற்கும், இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் சிறந்த வகையில் உதவும்.

தாய்லாந்து

# பேருந்து விபத்தில் 14 பேர் உடல் நசுங்கி பலி

தாய்லாந்தின் பிரச்சாப் கிரி கான் மாகாணத்தில் திங்கட்கிழமை (04) நள்ளிரவில் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்து ஓடியுள்ளது. சிறிது நேரத்தில் வீதியோரத்தில் உள்ள மரத்தின் மீது பயங்கரமாக மோதியுள்ளது. இதில் பேருந்தின் முன்பகுதி இரண்டாக பிளந்ததுள்ளது.

தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பேருந்தின் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டுள்ளனர். இந்த கோர விபத்தில்



14 பேர் உடல் நசுங்கி பலியாகியுள்ளதுடன், 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அந் நாட்டு அரசு போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

நைஜீரியா



## இராணுவ ட்ரோன் தவறுதலாக தாக்கியதில் 30 பேர் பலி

நைஜீரிய நாட்டின் வடமேற்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளில் ஆயுத கும்பல்கள் செயல்பட்டு வருகின்றன. அவர்களுக்கு எதிராக இராணுவம் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், நைஜீரியாவின் வடமேற்கில் உள்ள கடுனா மாகாணம் டுடுன்பிரி கிராமத்தில் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

அந்த கிராமத்தில் பண்டிகை ஒன்றுக்காக மக்கள் ஏராளமானோர் ஒரு இடத்தில் கூடி இருந்தனர். அப்போது இராணுவ டிரோன் தவறுதலாக கிராம மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் பலியானவர்கள் எண்ணிக்கை குறித்து அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

ஆனால், கிராம மக்கள் கூறும்போது, 30 பேர் பலியானதாகவும், 60 பேர் காயம் அடைந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.


அமெரிக்கா

## 12 படம் பார்த்தால் ரூ.6 இலட்சம் பரிசு

கிறிஸ்மஸ் பண்டிகைக்கான நெருங்கி வரும் சூழலில் அமெரிக்காவை சேர்ந்த சப்ஸ்கிரிப்ஷன் பாக்ஸ் நிறுவனம் 12 ஹால்மார்க் விடுமுறை திரைப்படங்களை பார்த்து அவற்றை தரவரிசைப்படுத்தும் நபருக்கு 2,000 அமெரிக்க டொலர் (இலங்கை மதிப்பு படி 6 இலட்சம்) பணத்தை பரிசாக வழங்குவதாக அறிவித்துள்ளது.

மேலும், இந்த சலுகையை பெற விரும்புவோர் பார்க்க வேண்டிய திரைப்படங்களின் பட்டியலையும் நிறுவனம் வழங்கியுள்ளது. தெரிவாகும் விமர்சகர்கள் திரைப்படங்களை பார்ப்பதோடு, இன்ஸ்டாவில் தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்த அதிர்ஷ்டசாலி ஒவ்வொரு படத்தையும் ஃபெஸ்ட்டிவிட்டி




(Festivity), ஃபேக்டர்(Factor), கெமிஸ்ட்ரி செக் (Chemistry Sec), எமோஷனல் இம்பேக்ட்(Emotional impact) மற்றும் படத்தை மீண்டும் பார்க்க வேண்டும் என தோன்றும் ஆசை போன்ற பல விடயங்களின் அடிப்படையில் மதிப்பிட்டு தங்களது எண்ணங்களை இன்ஸ்டாவில் பகிர வேண்டும்.

இதில் ஈடுபடும் பண்டிகைக் கால திரைப்பட ஆர்வலருக்கு சினிமாட்டிக் எக்ஸ்பீரியன்ஸ் (Cinematic Experience )மட்டுமல்லாது 2,000 டொலர் பரிசு தொகை மற்றும் பல சலுகைகள் வழங்கப்படும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னை

## சசிகலாவை நீக்கியது சரி



ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுச்செயலாளராக சசிகலாவும், துணை பொதுச் செயலாளராக டி.டி.வி.தினகரனும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இதற்காக அ.தி. மு.க. பொதுக்குழுவில் தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

அதன்பிறகு அ.தி.மு.க. பொதுக்குழு கூடி, சசிகலா, தினகரன் ஆகியோரை அப்பதவிகளில் இருந்தும், கட்சியில் இருந்தும் நீக்கியது. அதற்கு பதில் ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிச்சாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிலையில், பொதுச்செயலாளர் பதவியில் இருந்தும், கட்சியில் இருந்தும் தன்னை நீக்கியது செல்லாது என அறிவிக்கக்கோரி சசிகலா, சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கை நிராகரிக்கக்கோரி ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் மனு தாக்கல் செய்துள்ளனர். மனுவை ஏற்றுக்கொண்ட உரிமையியல் நீதிமன்றம், சசிகலாவின் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டது.

மணிப்பூர்

## மணிப்பூரில் மீண்டும் வன்முறை

மணிப்பூரில் மெய்தி, குக்கி இன பிரிவினருக்கு இடையே மே 3-ந்திகதி கலவரம் வெடித்தது. இதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். 7 மாதங்களுக்கு மேலாகியும் அங்கே வன்முறை சம்பவங்கள் முற்றிலுமாக ஓயவில்லை.

இந்நிலையில் மணிப்பூர் மாநிலத்தில் திங்கட்கிழமை (04) இரு ஆயுதக்



குழுக்களுக்கு இடையே மீண்டும் ஏற்பட்ட மோதலில் 13 பேர் உயிரிழந்ததாக மணிப்பூர் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சென்னை

## 'மிக்ஜம்'க்கு 8 பேர் உயிரிழப்பு

'மிக்ஜம்' புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்ததால் நகரமே தண்ணீரில் தத்தளிக்கிறது. திங்கட்கிழமை (04) முழுவதும் பெய்த மழை, தற்போது ஓய்ந்துள்ளது. இதனால் மாநகரில் ஒருசில இடங்களில் தேங்கியுள்ள மழைநீர் வடிந்து வருகிறது.

இந் நிலையில், சென்னையில் பெய்த கனமழை காரணமாக இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளதாக சென்னை பொலிஸ் தெரிவித்துள்ளது. மேலும், கனமழையால்



> **7 சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளதுடன், 58 வீதிகளில் விழுந்த மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன**

சென்னையில் தற்போது 7 சுரங்கப்பாதைகள் மூடப்பட்டுள்ளன. மாநகரில் 58 வீதிகளில் விழுந்த மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது.




குருநாகல் மலியதேவ கல்லூரியை

# வீழ்த்திய கொழும்பு உவெஸ்லி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவு ஒன்று கால்பந்தாட்டத் தொடரில், கொழும்பு கடற்படை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற குருநாகல் மலியதேவ கல்லூரியுடனான போட்டியில் கொழும்பு உவெஸ்லி கல்லூரி 4-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

## நியூகாசில் செல்லும் டி கியா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டில் இணைய இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் கோல் காப்பாளர் டேவிட் டி கியா தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.



நியூகாசில் யுனைட்டெட்டி ன் கோல் காப்பாளர் நிக் போப் காயம டைந்துள்ள நிலையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

## மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முகாமையாளர் விலகல்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் விளையாடும் முறைமை, கழக முன்களவீரரான ஜடோன் சஞ்சோவை அவர் நடத்தும் முறைமையை கழக வீரர்கள் கேள்விக்குட்ப டுத்துவதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் உடனடியாக டென் ஹக்கின் பதவிக்கு ஆபத்தில்லை எனக் கூறப்படுகிறது.



கற்பிட்டி பிறீமியர் லீக்

## வீரர்கள் ஏலம்

■ எம்.யூ.எம். சனூன்

கற்பிட்டியில் வருடாந்தம் பிரமாண்டமாக நடைபெறும் கிரிக்கெட் திருவிழாவான கற்பிட்டி பிறீமியர் லீக் (கே.பி.எல்) கிரிக்கெட் தொடரானது அடுத்த மாதம் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொடருக்கு கற்பிட்டியிலுள்ள சகல கிரிக்கெட் கழகங்களிலுமுள்ள திறமையான விளையாட்டு வீரர்களைக் கொண்டு ஆறு அணிகள் ஆறு முகாமையா ளர்களால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.

அதன்படி எம்.என்.எம். முஆதின் முகாமைத்துவத்தின் கீழ் "பூம்ஸ்" அணியும், எம்.ஐ.எம். இஹ்லாஸின் முகாமைத்துவத்தின் கீழ் "கங்காறூஸ்" அணியும், என்.எம். மஹீனின் முகாமைத்துவத்தின் கீழ் "மஹாசின்ஸ்" அணியும், எம்.எப்.எம்.றியாஸ் மற்றும் ஸம்ஸமின் முகாமைத்துவத்தின் கீழ் "றைசிங் ஸ்டார்" அணியும், எம்.எம். மில்ஹானின் முகாமைத்துவத்தின் கீழ் "எம்.டி.எம்" அணியும், கனிஷ்டனின் முகாமைத்துவத்தீன் கீழ் "லியோ" அணியும் என ஆறு அணிகள் போட்டியிடவுள்ளன.

> **கல கிரிக்கெட் கழகங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட திறமையான 102 கிரிக்கெட் வீரர்கள் ஏலமிடப்படுவர்.**

இந்த வணிகளுக்கான வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வானது, கற்பிட்டியில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. இந்த ஏலத்தில் கற்பிட்டியிலுள்ள சகல கிரிக்கெட் கழகங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட திறமையான 102 கிரிக்கெட் வீரர்கள் ஏலமிடப்படுவதுடன் ஒவ்வொரு அணிக்கும் 13 வீரர்கள் முகாமையாளர்களால் ஏலத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யுனைட்டெட்டில் தொடர எதிர்பார்க்கும் வரான்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்களவீரரான ரஃபேல் வரான், அடுத்த மாதத்தைத் தாண்டியும் யுனைட்டெட்டில் தொடர எதிர்பார்த்துள்ளதாகக் கூறப்படுகிறது.

30 வயதான வரானை அடுத்த மாதம் யுனைட்டெட் விற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 06, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.